★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆடி 13உ சனி (28—7—56) ★ ★ வெளியூர்: ஆடி 14உ ஞாயிறு (29—7—56) [இதழ் 41

நீர்வாயு சக்தி மூலம் தொழிற்சாலைகளை இயக்குவதற்கு ஆராய்ச்சி

இலண்டன், ஜூலை 28—

நீர்வாயு சக்தியைக்கொண்டு தொழிற்சாலைகளை இயக்கலாமா என்பது குறித்து இங்கிலாந்து ஆராய்ச்சி செய்துவருகிறது.

தொழிற்சாலைகளை இயக்கும் சக்தியை உற்பத்தி செய்வதற்கு நீர்வாயு சக்தியைப் பயன்படுத்தும் முயற்சியில் கடந்த 8 ஆண்டு காலமாக பிரிட்டிஷ் அரசாங்கம் ஆராய்ச்சி நடத்திவருகிறது.

இந்த வேலை இன்னும் ஆராய்ச்சிக் கட்டத்தில்தான் இருக்கிறது. நீர்வாயு சக்தியைக்கொண்டு இயங்கும் தொழிற்சாலை அமைக்கப்படுவதற்கு முன்னர் பல பிரச்சினைகள் தீர்க்கவேண்டியுள்ளனதாம்.

'கனரகத் தொழில் நிர்மாணத்தில் மேலும் பங்கு வேண்டும்'

'தனியார் துறைக்குக் கூடுதலான ஊக்கம் தரவேண்டும்'

புதுத் தொழில்களைத் துவங்கக் கோரிய ரூ. 30 கோடிக்கு மீண்டும் வலியுறுத்தல்

உத்திர பிரதேசம் அங்கலாய்க்கிறது

லக்னோ, ஜூலை 26—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிர்மாணிக்க இருக்கும் கனரகத் தொழில்களில் மேலும் தனக்குக் கூடுதலான பங்கு வேண்டும் என உத்திர பிரதேசம் கோரக் கிளம்பி இருக்கிறது.

உத்திர பிரதேசத்தைத் தொழில் மயமாக மாற்றி அமைப்பதற்காக, தனியார் துறைக்கு இப்போழுது காட்டப்பட்டு வருவதை விடக் கூடுதலான ஊக்கம் தர இந்தியப் பேரரசு முன்வரவேண்டும் என வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

—இந்தியப் பேரரசின் கனரகத் தொழில் மந்திரியாக இருந்துவரும் எம். எம். ஷா அவர்களிடம், உத்திர பிரதேச தொழில் திட்ட மந்திரியாக உள்ள சி. பி. குப்தா, இவ்வாறு வற்புறுத்திக் கேட்டுள்ளார்.

கனரகத் தொழில்களைத் துவங்கும் விஷயமாக உத்திர பிரதேச அரசாங்கத்தைக் கலந்து பேச வந்திருக்கும் கனரகத் தொழில் மந்திரி ஷா, இப்பொழுது நடைமுறையில் இருந்துவரும் உ. பி. தொழில் நிர்வாகத் துறையில் சில சீர்திருத்தங்கள் செய்தாக வேண்டும் எனக் குறிப்பிட்டதாகவும் தெரிய வருகிறது

உத்திர பிரதேசத்தில் மேலும் பல புதிய தொழில்களைத் துவங்குவதற்காக, இந்தியப் பேரரசிடம் ரூ.30 கோடியை ஏற்கனவே உ. பி. அரசாங்கம் கடனாகக் கேட்டிருந்தது. தருணத்தைக் கைநழுவ விடாமல், தலைநகருக்கு வந்த கனரகத் தொழில் மந்திரியிடம், மீண்டும் தனது கடன் கோரிக்கையைப் பன்னிப் பன்னி உ. பி. அரசாங்கம் கேட்டுக்கொண்டு இருக்கிறதாகவும் சொல்லப்படுகிறது.

வாழ்வில் குறைபாடுகள் இருக்கின்றனவாம்!

ரஷ்யப் பிரதமர் ஒப்புதல்

"நாம் எவ்வளவோ சாதித்த பின்னரும்கூட நமது வாழ்வில் குறைபாடுகள் இருக்கின்றன; அதற்குப் பல்வேறு காரணங்கள் உண்டு; எது எப்படியிருந்தபோதிலும், அத்தகைய குறைபாடுகளைப் போக்குவதற்கு நாம் முயல வேண்டும்,"

என்று, ரஷ்யத் தலைமை அமைச்சர் புல்கானின் கூறியுள்ளார்.

★★★★★★★★★★★★★-★★-★★

தலைமை நிலையச் செய்தி:

ஒழுங்கு நடவடிக்கை

★

சென்னைத் தோழர் ஆர். டி. அரசு அவர்கள் கழகக் கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் மீறி நடந்து கொண்ட குற்றத்திற்காக அவர் பொதுச்செயலாளரால் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, 28—7—56-ஆம் நாளிலிருந்து ஐந்து ஆண்டுக் காலத்திற்குக் கழகத்திலிருந்து அறவே விலக்கி வைக்கப்பட்டிருக்கிறார். இனி ஐந்து ஆண்டுக் காலத்திற்கு அவர் தி. மு. கழகத்தோடோ, அல்லது தி. மு. கழகத்தைச் சார்ந்த அமைப்புக்களோடோ எவ்வித தொடர்பும் கொள்வதற்கில்லை.

'அறிவகம்'
சென்னை-13
27-7-56

தி. மு. க.
தலைமை நிலையம்

★★★★-★★★★-★★★★★★★★

பக்ரா-நங்கல் மின்சார உற்பத்தியைப் பயன்படுத்துவோம்'

'எங்கள் கோரிக்கைக்கு திட்டக் குழு இணங்கி விடும்'

'ரூ. மூன்று கோடி மூலதனத்தில் நூற்பு ஆலை ஒன்றும் துவங்கப்படும்'

பஞ்சாப் அரசாங்கத்தின் அபிவிருத்திப் பேராசை

சாந்திகார், ஜூலை 26—

கனரகம்—சிறிய அளவு ஆகிய இரண்டு தொழில்களையும் உள்ளடக்கிய விரிவான தொழில் அபிவிருத்தித் திட்டம் ஒன்றை பஞ்சாப் அரசாங்கம் தயாரித்திருக்கிறது.

திட்டக் குழுவின் ஒப்புதலுடன் இயந்திரக்கருவி தொழிற்சாலை, டெலிபிரிண்டர் உற்பத்தித் தொழிற்சாலை, புகைவண்டிப் பெட்டி கட்டும் தொழிற்சாலை ஆகிய தொழிற்சாலைகள் உட்பட வேறு பற்பல தொழில்களையும் நிர்மாணிப்பதில் பஞ்சாப் அரசாங்கம் பெரும் நம்பிக்கையுடன் இருந்துவருகிறது.

—புதிதாகத் துவக்கக் கருதும் முடிவான தொழில் பட்டியல் ஒன்றை இந்தியப் பேரரசிற்கு பஞ்சாப் அனுப்பிவிட்டிருப்பதாகக் கருதப்படுகிறது.

தொழில் துறையில் முன்னேறியுள்ள மற்ற மாகாணங்களைக் காட்டிலும், அத்துறையில் பஞ்சாப் தொடர்ந்தாற்போல் பின்தங்கிக் கிடப்பதின் காரணமாக, தனது திட்டங்களுக்குத் திட்டக் குழு ஆதரவு காட்டும் என்ற நம்பிக்கை பஞ்சாப் அரசாங்கத்திற்கு இருப்பதாகவும் தெரிகிறது.

பக்ரா—நங்கல் திட்டத்தின் உருபலனாக, உற்பத்தி செய்...

(4-ம் ...)

காமன்வெல்த் மாநாடு: ஆஸ்திரேலிய பிரதமர் குற்றச்சாட்டு

ஒருமுகப்பட்ட கருத்தறிவிக்க முடியவில்லையாம்

அதனால் காமன்வெல்த் ஒரு இயக்கமாக உருவெடுக்க இயலவில்லையாம்

ஒட்டாவா, ஜூலை 27—

அண்மையில் நடைபெற்ற காமன்வெல்த் பிரதமர்கள் மாநாடு தனக்கு பெரும் திருப்தியைத் தந்துவிடவில்லை என்று-ஆஸ்திரேலிய பிரதமர் மென்சீஸ் குறைபட்டுக்கொண்டார் எனத் தெரியவருகிறது.

'ஒரு குறிப்பிட்ட பிரச்சினை—அல்லது பிரச்சினைகளை விவாதித்து, ஒருமுகமான கருத்தை உலகுக்கு அறிவிக்க காமன்வெல்த் முயற்சிக்க வேண்டும்' என்று அவர் கூறினாராம்.

'காமன்வெல்த், உலகில் ஒரு இயக்கமாக — சக்தியாக உருவெடுக்க வேண்டுமானால் இது செய்யப்படவேண்டும்' என்றும் அவர் பத்திரிகையாளரிடம் கூறினாராம்.

"ஒருமுகப்பட்ட கருத்தறிவிக்காவிடில், மாநாட்டு முடிவில் காமன்வெல்த் பிரதமர்கள் ஒரு அறிக்கை வெளியிடுவதில் பலன் எதும் இல்லை; அநேகமாக அந்த மாதிரி அறிக்கைகள், வேற்றுமைகள் மிகுந்ததாகவே இருக்கின்றன; ஏனெனில், வேற்றுமைகளை மாநாட்டில் கூடுவோர் ஒத்துக்கொள்கின்றனர்,"

என்றும் அவர் கூறியிருக்கிறாராம்.

பம்பாய் துப்பாக்கிப் பிரயோகங்கள் குறித்துப் பேசக் கூடாதாம்!

அவை பிரச்சினைக்குத் தொடர்பற்றவையாம்!

மக்கள் சபைத் தலைவரின் உத்திரவு

புதுடில்லி, ஜூலை 27—

"கடந்த நவம்பர் — ஜனவரி திங்கள்களில் பம்பாயில் நடைபெற்ற சம்பவங்கள், போலீசாரின் மிருகத்தனமான வெறிச் செயல்கள் இவை குறித்து மக்கள் சபையில் எவரும் பேசக்கூடாது," என்று, மக்கள் சபைத் தலைவர் எம். அனந்தசயனம் அய்யங்கார் 'தடை உத்தரவு' பிறப்பித்திருக்கிறாராம்.

'அவை பற்றிப் பேசுவது, மாநில புதுஅமைப்பு மசோதாவிற்குத் தொடர்புடைய விஷயங்கள் அல்லன" என்று அவர், தன் உத்தரவிற்குக் காரணம் கூறியிருக்கிறாராம்.

பம்பாய் பிரச்சினை குறித்துப் பேசும்போது, 'பம்பாய் சம்பவங்கள் குறித்துப் பேசுவதற்கு சபைக்கு உரிமை உண்டு' என்று பல உறுப்பினர்கள் ஒழுங்குப் பிரச்சினைகளை எழுப்பியபோதுதான், சபைத் தலைவர் இந்த உத்தரவு பிறப்பித்தாராம்.

"இப்போதைய விவாதத்தைப் பொறுத்து, பம்பாயில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகங்கள், சம்பவங்கள்—அவை நியாயமா அல்லவா என்பவை குறித்தெல்லாம் பேசுவது, விஷயத்திற்குத் தொடர்புடையதாகாது" என்று சபைத் தலைவர் விளக்கம் கூறினாராம்.

"பம்பாய், 'டில்லி ஆட்சியின் கீழ் இருக்கவேண்டுமா, அல்லது, மராட்டியத்துடன் உடனடியாக இணைய வேண்டுமா' — என்பது குறித்து இங்கே விவாதியுங்கள்; விருப்பு வெறுப்பின்றி விவாதியுங்கள்' என்றும் அவர் கூறினாராம்!

மக்கள் சபைமீது மராட்டியர் 'படையெடுப்பு'

கட்டிடத்திற்கு பலத்த போலீஸ் காவல்

புதுடில்லி, ஜூலை 27—

மராட்டிய வீரர்கள் இப்போது மக்கள் சபைமீது 'படைஎடுத்திருக்கின்றனர்' என்று தெரியவருகிறது.

இந்த மராட்டியப் படையெடுப்புக்கு அஞ்சி, மக்கள்சபையைச் சுற்றிலும் இரும்புத்தொப்பி அணிந்த போலீசார் காவல் புரிந்து வருகின்றனராம்.

மக்கள் சபைக்குள் புகப்போவதாக மராட்டிய ஆர்ப்பாட்டக்காரர்கள் அச்சுறுத்தியிருந்தனர் என்றும், அதனைத் தடுப்பதற்காகவே மக்கள்சபைக்குக் காவல் வைக்கப்பட்டது என்றும், சபைக்குவரும் பார்வையாளர்கள் எல்லாம் சோதனை செய்யப்பட்டு அனுப்பப்பட்டனர் என்றும் கூறப்படுகிறது.

சபைக்குச் சற்று தூரத்தில், கண்ணீர்ப்புகைக் குண்டுகளுடன் ரிசர்வ் பட்டாளம்வேறு காத்திருந்ததாம்—ஏதேனும் நெருக்கடி ஏற்பட்டால் அதனைச் சமாளிப்பதற்காக!

நம் நாடு

சென்னை 28—7—'56 சனி

தேஷ்முக் முறையீடு

மக்களாட்சி முறையைப் பின்பற்றித்தான் இந்தியப் பேரரசு நடைபெற்று வருவதாக உலக நாடுகள் முழுவதிலும் பகட்டாக விரிவான முறையில் விளம்பரம் செய்யப்பட்டு வருகிறது. அங்குள்ளாரும் அப்பகட்டான விளம்பரத்தை உண்மை என நம்பி வந்துள்ளனர்.

அது வெறும் திட்டமிட்டுச் செய்யப்படுகிற அரசியல் விளம்பரம் என்பதை தேஷ்முக் முறையீடு அம்பலப்படுத்திவிட்டது. இனி உலக மக்கள், இந்தியப் பேரரசின் ஜனநாயக நாடகத்தை மிக மிக விழிப் புணர்வுடன் நோக்க முன்வருவர் என்பதில் ஐயமில்லை.

கோடிக்கணக்கில் உள்ள வாக்காளர்களைக் கொண்டு ஜனநாயகப் பரீட்சை நடத்தி வருவதாகவும், அப்பரீட்சையில் கூடுமானவரை முதல்தரமான வெற்றி பெற்றுவருவதாகவும், இந்தியப் பேரரசை இயக்கிவரும் பொறுப்பில் இருக்கும் காங்கிரஸ் கட்சியினர் அடிக்கடி பீத்திக்கொள்ளுகின்றனர். அந்தப் பீத்தலுக்கும் உண்மையான ஜனநாயகப் பண்புக்கும் எந்த அளவு தொடர்பு இருந்து வருகிறது என்ற பேருண்மையை, தேஷ்முக்கின் விளக்கம் ஒளிவு மறைவின்றி எடுத்துக் காட்டிவிட்டது.

ஜனநாயகப் பண்புக்கும் பொதுவாகக் காங்கிரஸ் கட்சிக்கும் குறிப்பாக இந்தியப் பிரதமர் நேருவுக்கும் இருந்துவரும் பிடிப்பு வெறும் சொல்லளவில் [...]ல்லாது, இலட்சிய அடிப்ப[...] கொண்டிருப்பதல்ல என்ற உண்மையை, தேஷ்முக்கின் இடித்துரை, எவராலும் மறுக்க முடியாத வகையில், கல்லில் செதுக்கிய எழுத்துப்போல் நிலைபெறதாகச் செய்துவிட்டிருக்கிறது.

இந்தியப் பிரதமர் நேரு அவர்கள், எந்த அளவு கூட்டு அமைச்சர்களை மதித்து நடக்கும் வழக்கத்தைக் கொண்டிருக்கிறார்—எந்த அளவு கூட்டு அமைச்சர்களின் கருத்துக்களுக்கு செவிமடுப்பவராக இருந்திருக்கிறார் என்பதிலும் அவருடைய எதேச்சாதிகார ஆணவ முனைப்பை ஆணித்தரமாக எடுத்துக்காட்டுவதாகவே, பதவியைத் துறந்த நிதி அமைச்சரின் தகவல் அமைந்திருக்கிறது. அதுவுமன்றி, கூட்டு அமைச்சர்களாக இருந்து வருகிறவர்கள், கூட்டுப் பொறுப்புக்கு வைத்திருக்கும் மதிப்பையும், பிரதமர் போன்றே தங்களுக்குத் தொடர்பில்லாத விஷயங்கள் அனைத்திலும் தம்தம் சொந்தக் கருத்தை அரசாங்கக் கருத்து என வெளிப்படுத்தி வரும் பொறுப்பற்ற நடத்தையையும் நிதி அமைச்சர் கண்டித்துக் கூறியுள்ளார். அவர் கூறியுள்ளதைக்கொண்டு, பண்டிதரின் அமைச்சரவை 'குட்டிச் சர்வாதிகாரிகளைக் கொண்ட விசித்திர அவை'யாகவே செயல்பட்டு வருகிறது என்ற முடிவையே ஒவ்வொருவரும் கொள்ளவேண்டியதாகிறது.

இவ்வளவும் பற்றி தேஷ்முக் அவர்கள் அறிவித்திருப்பதாவது :—

" சபையில் பிரரேபிக்கப்பட்ட மாநிலச் சீரமைப்பு மசோதாவில் முக்கிய மாறுதல்கள் எதுவும் இல்லையென்றாலும், பொறுக்குக் குழு சிபாரிசுகள் தெரியும் வரையில் பொறுத்துப் பார்க்கலாம் என்று நினைத்தேன்.

" ஆனல், சென்ற ஜுன் மாதத்தில், பம்பாயில், பிரதம மந்திரி இதுபற்றி அசாதாரணமான முறையில் அறிவித்த முடிவு இந்த விவாதங்களைப் பாதித்துவிட்டதென்று எனக்குத் தோன்றிற்று.

" சர்க்காரின் முடிவை எந்தச் சமயத்திலும் அறிவிக்கத் தனக்கு உரிமை உண்டு என்று பின்னர் அவர் வியாக்கியானம் செய்தது பொருந்தாது.

" ஏனெனில், அது சர்க்காரின்—மந்திரிசபையில் இந்த யோசனை குறித்து விவாதம் நடக்கவில்லை; கடிதம் மூலமாகவும் மந்திரிகளின் கருத்து அறியப்படவில்லை; இந்த விஷயத்தில் விசேட அக்கறையுடைய என்னைப் போன்ற மந்திரிகளை எந்த முறையிலும் கலந்து பேசவில்லை. மந்திரி சபையின் குழு இதைப்பற்றி விவாதித்ததா என்றும், ரிகார்டு இல்லை. இன்றைய தேதி வரையில் இந்த முடிவுபற்றி உத்தியோக பூர்வமான வாசகம் மந்திரிகளுக்குக் கிடைக்கவில்லை.

"மாநில சீரமைப்பு சம்பந்தமான விஷயங்களில் பிரதம மந்திரி உள்பட அதிகாரம் பெறாத சில மந்திரிகள் சட்ட விரோதமான முறையில் சில முடிவுகளைச் செய்து அவற்றை சர்க்கார் முடிவுகள் என்று அறிவித்திருக்கிறார்கள்.

" ஆந்திரா பிரிவினை விஷயத்தில், மந்திரி சபையைக் கலக்காமலேயே பிரதம மந்திரி ஒரு முடிவு அறிவித்தார்.

" பம்பாய் நகரம் மத்திய சர்க்காரின் நிர்வாகத்திலிருக்க வேண்டும் என்று சென்ற ஜனவரியில் அறிவிக்கப்பட்ட முடிவும், மந்திரி சபையை முன்னதாகக் கேட்காமல் செய்யப்பட்ட முடிவுதான்."

பம்பாய் நகர் குறித்து எதேச்சாதிகாரமாக நடந்துகொண்ட ஒன்றைக் கொண்டு மட்டுமே, கூட்டு அமைச்சர்களை அலட்சியமாகக் கருதி சர்வாதிகாரமாகச் செயல்படும் போக்கு பிரதமர் நேரு அவர்களுக்கு இருக்கிறது என்ற அவசர முடிவிற்கு நிதி அமைச்சர் வந்துவிட்டார் எனக் கூறிவிடுவதற்கில்லை. கூட்டு அமைச்சர்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு, தம்மிச்சையாக எதிலும் செயல்பட்டு வருவதை பிரதமர் நேரு நீண்ட காலமாகப் பின்பற்றி வருகிறார் என்பதை, நிதி அமைச்சர் தக்க எடுத்துக்காட்டுடன் வலியுறுத்திக் கூறுகிறார். அதாவது ஆந்திரப் பிரிவினையின்போதே, அப்பிரிவினையை, மற்ற அமைச்சர்களைக் கலந்துகொள்ளாமலேயே பிரதமர் அறிவித்திருக்கிறார் என நிதி அமைச்சர் சுட்டிக் காட்டுவதின் மூலம், கூட்டு அமைச்சர்களை மதிக்காது நடந்துகொள்ளுவதும், தம் விருப்பு வெறுப்புப்படி செயல்பட்டு வருவதும் இந்தியப் பிரதமர் உள இயல்பாகிவிட்டது எனத் தெளிவாகக் குறிப்பிடுகிறார் நிதி அமைச்சர்.

இந்தியப் பிரதமரின் ஜனநாயக வேடத்தைக் கலைத்துவிட்டதுடன், மற்ற அமைச்சர்களின் உளப்பாங்கையும் நிதி அமைச்சர் படம் பிடித்துக் காட்டியுள்ளார். இந்திய நலம், தேச முன்னேற்றம் என்றும் பீத்தி வருகின்ற மத்திய அமைச்சர்கள், தம் தம் மாகாணம், சொந்த உள்ளூர் விவகாரங்களில் எத்தகையப் பற்றுக்கொண்டு கருத்துச் செலுத்தி இருக்கிறார்கள் என்பதையும் நிதி அமைச்சர் ஓவியமாக்கி இருக்கிறார். அவ்வகையில் இந்தியப் பிரதமர் நீங்கலாக, பண்டித பந்த் உள்ளிட்ட மத்திய அமைச்சர்கள் நடந்துகொண்டவிதம் பற்றி அவர் கூறியுள்ளது, இது—

" மத்திய சர்க்காரின் மந்திரிகள், மத்திய சர்க்கார் சம்பந்தப்பட்ட பொறுப்புகளில் மட்டுமே அக்கரை கொள்ளவேண்டும்; தங்களது தொகுதி அல்லது மாநிலம் பற்றிய விவகாரங்களில் நாட்டமே செலுத்தக் கூடாது என்று நினைப்பவன் நானல்ல.

" ஆயினும், எனது மற்ற சகாக்கள் எவரையும்விட (பிரதம மந்திரி நீங்கலாக), உள்ளூர் விவகாரங்களில் மிகக்குறைவான அக்கரையே நான் செலுத்தி வந்திருக்கிறேன் என்பதைக் கூறுகிறேன்."

இந்தியப் பிரதமர் நேரு உள்ளிட்ட மற்ற அமைச்சர்களின் தான்தோன்றித்தனமான போக்கை உலகுக்கு உணர்த்துவதுடன், நிதி அமைச்சரின் முறையீட்டில் பொதிந்துள்ள உண்மைகள் முற்றுப்பெற்றுவிடவில்லை. ஆராய ஆராய மேலும் பல புதிய உண்மைகளை வெளிப்படுத்துவதாக அம்முறையீடு அமைந்திருக்கிறது. அதையும் தொடர்ந்து எழுதுவோம்.

தமிழ் மாவட்டங்களில் பாதைகள் அபிவிருத்தி

மூன்று பகுதிகளுக்கு மத்திய நிதி அளிக்கப்பட்டுள்ளது

சென்னை, ஜூலை 26—

மத்திய ரோடு நிதியிலிருந்து சென்னை மாநிலத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகையில் நான்கு பாதை வேலைகளுக்கு—செங்கற்பட்டில் ஒன்று; நீலகிரியில் இரண்டு; இராமநாதபுரத்தில் ஒன்று— ரூ. 4,68,000 கழித்துக் கொள்ளும்படி இந்திய சர்க்கார் உத்தரவிட்டுள்ளனராம்.

செங்கற்பட்டு ரோடு வேலைக்கு அளிக்கப்பட்டுள்ள மானியத் தொகை ரூ. 1,00,000; நீலகிரியில் இரண்டு வேலைகளுக்கு தலா ரூ 23,000 அதாவது இரண்டுக்கும் சேர்த்து ரூ. 46,000; இராமநாத புரத்திற்கு ரூ. 3,20,000.

சென்னை, ஜூலை 26—

நகரின் பல்வேறு பகுதிகளிலும் 324 பிச்சைக்காரர்கள் போலீசாரால் கைது செய்யப்பட்டு மேலப்பாக்கம் முகாமிற்கு அனுப்பப்பட்டனர். இதில் 63 பெண்களும், 30 குழந்தைகளும் உள்ளனர்.

சைப்ரசிற்கு விடுதலை வழங்குவதற்கு காலம் கனியவில்லையாம்!

பிரிட்டிஷ் மந்திரியின் ஏகாதிபத்திய வாதம்

லண்டன், ஜூலை 25—

"ஒரு நாடு தன்னுடைய எதிர்காலத்தைத் தானே நிர்ணயம் செய்துகொள்ளும் சுய நிர்ணய உரிமை என்பது, உரிய காலத்தில் ஆடுவதற்குரிய சீட்டுத்தான்.

"இந்தியா, கோல்ட் கோஸ்ட் போன்ற நாடுகளுக்கு அந்த உரிமை வழங்கப்பட்டதாலேயே சைப்ரசிற்கும் அது வழங்கப்பட வேண்டுமென்பது சரியானதல்ல; சைப்ரஸ் அந்த உரிமையைப் பெறுவதற்குரிய காலம் இன்னும் வரவில்லை,"

என்று, மந்திரி சாலிஸ்பரி பிரபு, பிரபுக்கள் சபையில் பேசும்போது சைப்ரஸ் பற்றிய சர்க்காரின் கொள்கையைக் கண்டிக்கும் தொழிற்கட்சியினருக்குப் பதிலளிப்பதாகக் கருதிக்கொண்டு ஏகாதிபத்திய வாதம் புரிந்திருக்கிறார்.

மேலும், இந்த விவகாரத்தில் துருக்கிக்கும் கிரீசுக்கும், இணைய முடியாத பெரும் பிளவு இருப்பதாகவும், அதனால் இந்தச் சிக்கலை மனதில் கொண்டே சைப்ரசிற்கு சுயநிர்ணய உரிமை வழங்குவதற்கு, ஒரு குறிப்பிட்ட காலத்தை நிர்ணயிக்க முடியும் என்றும், இப்போதே என்று சுதந்திரம் வழங்குவோம் என்று கூறமுடியாது என்றும் அவர் கூறினாராம்.

★

'மகாரியஸ் பாதிரியாரை விடுதலை செய்க'

தொழிற்கட்சியினர் தீர்மானம்

லண்டன், ஜூலை 26—

"சைப்ரஸ் விடுதலை இயக்கத் தலைவரான மகாரியஸ் பாதிரியாரை விடுதலை செய்து, அவரை இலண்டனுக்கு அழைத்து, சைப்ரசின் எதிர்காலம் குறித்து அவருடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும்'

என்று, தொழிற்கட்சியினர், மக்கள் சபையில தீர்மானம் ஒன்று கொண்டுவந்துள்ளன'.

மகாரியஸ் பாதிரியார் நாடு கடத்தப்பட்டு இப்போது, சேய்செல்லஸ் தீவில் காவல் வைக்கப்பட்டிருக்கிறார்.

வந்துள்ள தீர்மானம், 'சைப்ரஸ் தீவிற்கு புதிய அரசியல் சட்டம் வகுக்குமாறு நியமிக்கப்பட்டுள்ள ராட்கிளிப் பிரபு, மகாரியஸ் பாதிரியாருடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்' என்றும் கோரியுள்ளது.

போக்கு-வரத்து சாதனக் குறைவு

உணவுப் பொருள் விலை ஏற்றத்திற்குக் காரணம்

மதுரை, ஜூலை 25—

" திறந்த வாகனங்களில் உணவுப் பண்டங்கள் ஏற்றிச் செல்லப்பட்டதால், சுமார் ஒரு கோடி ரூபாய் பெறுமான உணவு தானியங்கள் நஷ்டமாயிற்று,"

என்று, மதுரை இராமநாதபுரம் வர்த்தகக் கழகச் செயலாளர் கங்காதரம் கூறியிருக்கிறார்.

போக்கு-வரத்துச் சாதனங்கள் கிடைப்பது பெரும் கஷ்டமாக இருப்பதால், உணவுப் பண்டங்களின் விலை மேலும் ஏறக்கூடும் என்றும் கூறியிருக்கிறார்.

திட்டவட்டமாக கூறிவிட்டார்!

ஆந்திர முதலமைச்சரின் காலமறிந்த நடவடிக்கை

கிடுப்ரோலு, ஜூலை 26—

' புதிய ஜவுளிக் கொள்கையானது கைத்தறி தொழிலையும், கைத்தறி தொழிலில் அக்கரை கொண்டிருப்போரையும் பாதிப்பதாக இருக்கிறதென்றும், கைத்தறியில் விசைத் தறியைப் புகுத்துவதில் ஆந்திர சர்க்கார் அவசர மனப்பான்மை காட்ட விரும்பவில்லையென்றும், ஆந்திர சர்க்கார், மத்திய தொழில் வர்த்தக மந்திரியிடம் தெரிவித்திருக்கிறது,"

என்று ஆந்திர முதன் மந்திரி தெரிவித்துள்ளார்.

அனுமந்தையா ராஜினமா

சட்டசபை காங்கிரஸ் கட்சி பரிசீலிக்கும்

புதுடில்லி, ஜூலை 26—

'நிர்ப்பந்தம் காரணமாக மைசூர் முதலமைச்சர் அனுமந்தையா இராஜிநாமாச் செய்திருப்பதைப் பரிசீலிப்பதற்காக மைசூர் சட்டசபை காங்கிரஸ் கட்சிக் கூட்டம் சீக்கிரமே நடைபெற வேண்டும்' என்று, மத்திய காங்கிரஸ் பார்லிமெண்டரிபோர்டு முடிவு கூறியிருக்கிறதாம்.

அட்லி இந்தியாவுக்கு வரக்கூடுமாம்!

லண்டன், ஜூலை 26—

பிரிட்டிஷ் தொழிற்கட்சித் தலைவர் அட்லியும், அவரது துணைவியாரும் இந்தியப் பிரதமர் அழைப்பிற்கிணங்க இந்தியாவுக்கு வருகை தரக்கூடுமாம்!

தொழிற்கட்சியின் சார்பில், அட்லி முதலமைச்சராக ஆட்சி பீடத்திலிருந்தபோதுதான், இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்கப்பட்டது நினைவிலிருக்கலாம்.

இந்தியாவில், 1955-ல், மொத்தம் ரூ 8,26,000 மதிப்புள்ள தராசு படிக்கயருக்கள் போன்ற நிறுவை சாதனங்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

பழைய பல்லவிதான்!

திருத்தணி, ஜூலை 26—

"ஆந்திரா—சென்னை எல்லைத் தகராறு, மாநிலச் சீரமைப்புக் குழு அறிக்கையின் விளைவாக எழுந்துள்ள மற்ற எல்லைத் தகராறுகளுடன் சேர்த்துத்தான் தீர்க்கப்படும்"

என்று ஆந்திர துணை முதன் மந்திரி சஞ்சீவி ரெட்டி கூறியுள்ளார்.

'பல்கலைக் கழகப் பட்டம் அவசியந்தானு?

புதுடில்லி, ஜூலை 26—

சர்க்கார் வேலைக்கு பல்கலைக் கழகப் பட்டம் அவசியந்தானு என்பதுபற்றி விசாரணை நடத்திய இராமசாமி (முதலியார்) குழு அறிக்கையின் நகல்கள் சில இலாகாக்களுக்கும் எல்லா மாநில சர்க்கார்களுக்கும் கருத்தறிவிப்பதற்காக அனுப்பப்பட்டிருக்கிறதாம்.

உயர்தர அதிகாரிகள் மீது நடவடிக்கை

விசேட அதிகாரி நியமனம்

புதுடில்லி, ஜூலை 26—

இந்திய சர்க்காரின் உயர்தர அதிகாரிகளின்மீது கூறப்படும் புகார்களைக் கவனித்து, அவர்கள் மீது இலாகா பூர்வமான நடவடிக்கை எடுப்பதற்காக சர்க்காரின கண்காணிப்பு இலாகாவில் ஒரு விசேட அதிகாரி நியமிக்கப்படுவார் என்று சர்க்கார் அறிவிப்பு கூறுகிறது.

செய்திச் சுருள்

★

100 மணி நேரம் சைக்கிள் சவாரி !

திருவள்ளூர், ஜூலை 25—

திருவள்ளூர் வட்டத்திலுள்ள வாணியம்பாடியைச் சேர்ந்த தோழர் பி எம். கலீல், 17-7-56 மாலை 6 மணிக்கு சைக்கிள் சவாரி ஆரம்பித்து, தலைமயிரில் 6 சைக்கிள்களைக் கட்டி இழுத்தும், ஆளைப் படுக்கவைத்து அவர் மேல் சைக்கிளை விட்டும், சைக்கிள் டயருக்குள் சைக்கிளை விட்டும், மற்றும் பல அரிய வேலைகள் செய்து, 21—7—56 மாலை 4 மணியளவில் சைக்கிளை விட்டு இறங்கினர்.

ஸ்பீட் லிவர் பீடி தொழிற்சாலை உரிமையாளர் எஸ். இதயத்துல்லா அவர்களால் அரை சவரனில் கை விரல் அணியும், அரை சவரன் பதக்கமும், ஏ டி. எம். பஸ் மானேஜர் அவர்களால் அரை சவரனில் கை விரல் அணியும், மற்றும் சிலரால் 9 பொன் பதக்கங்களும், காய்கறி விற்பனையாளர் சார்பாகவும் தையல் தொழிலாளர்கள் சார்பாகவும், இரு வெள்ளிக் குவளைகளும் பொதுமக்கள் சார்பாக ரூ. 600-ம் கொடுக்கப்பட்டன. மாலை 6 மணிக்கு பாராட்டு ஊர்வலமும் நடைபெற்றது.

தி. மு. க. சொற்பயிற்சி மன்றம் அமைப்பு

20—7—56 இரவு 8 மணிக்கு, சங்கராயினூர் கோவில் நகர கைத்தறி நெசவுத் தொழிலாளர் சங்க அலுவலகத்தில், தோழர் த கிருட்டிணமூர்த்தி தலைமையில், மேற்படி மன்ற அமைப்புக் கூட்டம் நடைபெற்றது தோழர்கள் டி எம் சுப்பையா, இரா. பழனிவேலு ஆகியோர் மன்ற வளர்ச்சி குறித்துப் பேசினர். பின்னர் தோழர் இரா. பழனிவேலுவைச் செயலாளராகக் கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

விருதுநகர் வள்ளுவர் சொற்பயிற்சி மன்றம்

இம்மன்றத்தின் 13-வது சொற்போர் அரங்கு, 22—7—56 காலை 10-30 மணிக்கு திரு. டி. துரைராசன் தலைமையில் நடைபெற்றது 'மதம் மக்கள் முன்னேற்றத்திற்குத் தடை' என்ற பொருள் பற்றிய சொற்போரில் தோழர்கள் நாகராசன், சங்கரன், விவேகானந்தன், சங்கரநாராயணன், ஆகியோர் பேசினர். வாக்கெடுப்பில் தீர்மானம் வெற்றி பெற்றது.

சேலம் 19-வது வட்ட கைத்தறி நெசவாளர் முன்னேற்ற சங்கம்

22—7—56 மாலை 4 மணிக்கு, மேற்படி சங்கத்தின் வருடாந்திர தேர்தல் கூட்டம் தோழர் எம் வி. வேலாசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எம். வி. வேலாசாமி, எம். ஆர். தேவராஜ், எம். எஸ். வி. பதி, வி. டி பால்சாமி, என். சி இராமசாமி ஆகியவர்கள் முறையே தலைவர், துணைத் தலைவர், செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளராகவும், 10 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கோணமேட்டில் பொதுக்கூட்டம்

24—7—56 மாலை 6 மணியளவில், வாணியம்பாடி கோணமேடு அண்ணா படிப்பகச் சார்பில் தோழர் எம். செகந்நாதம் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தோழர்கள் டி. துரைராசன், ஜி. எஸ். ஆனந்தம், சுந்தரராஜ், எம். எம். சாமி, எம் சி ; ஆகியோர் சொற்பொழிவாற்றினர். முனிசிபல் ஆரம்பப் பள்ளி மாணவ மாணவிகட்கு அண்ணா படிப்பகத்தாரால் பலகை, புத்தகம், பென்சில் முதலியன இலவசமாக வழங்கப்பட்டன.

எம். ஜி. ஆர். அன்பளிப்பு

ஜூபிடர் பிக்சர்சாரின் பங்குதாரரான ஜனாப் எஸ். கே. மொய்தீன் அவர்களின் குமாரர் எஸ் கே. அபிபுல்லா அவர்கள் திருமணத்தின்போது, புரட்சி நடிகர் எம் ஜி இராமச்சந்திரன் அவர்கள் கிரனூர் வந்திருந்தார். கிளைக் கழகத் தோழர்கள் தோழர் எம். ஜி ஆர். அவர்களைச் சந்தித்து அளவளாவி, அவரிடம் கழக வளர்ச்சிக்கு ரூ. 25/ நன்கொடை பெற்றனர்.

முத்தமிழ் மறுமலர்ச்சி மன்றத் துவக்கம்

15-7-56 பகல் 11-30 மணிக்கு, கோவை 27-வது வட்டம் இராமர் கோவில் வீதியில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களால் மேற்படி மன்றம் துவக்கி வைக்கப்பட்டது.

21—7—56 இரவு 10 மணியளவில் மன்ற உறுப்பினர்கள கூட்டம் தோழர் க. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ர. கிருட்டிணன், முனுசாமி, மருதாசலம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். இறுதியில், தேனீர் விருந்தும் நடைபெற்ற பின்னர், தோழர் க ஆறுமுகம் அவர்களைச் செயலாளராகக் கொண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

கரூர் இலட்சிய நாடக மன்றம்

16—7—56 இரவு 10 மணிக்கு, மேற்படி மன்ற செயற்குழுக் கூட்டம், மன்றத்தில் நடைபெற்றது. 'தங்கையின் காதலன்' என்னும் நாடகம் நடத்துவது என்றும், இலங்கைத் தமிழர்படும் அவதி குறித்து அனுதாபம் தெரிவித்தும், மத்திய—மாகாண சர்க்கார் இதற்கு உடனடியாகத் தீர்வு காணுமாறு கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பம்பாய் புயல் நிவாரண குழு கலைப்பு

22-7-56 அன்று தாராவியில், திரு கே பி. சிவக்கொழுந்து தலைமையில் மேற்படி கூட்டம் நடைபெற்றது. நன்கொடை வசூலான ரூ. 1,143-3-9-ல் செலவு ரூ 168-3-9 போக, மீதி ரூ. 975 சென்னை புயல் நிவாரணக் குழுவிற்கு அனுப்பிவைத்ததை குழு ஒப்புக்கொண்டது. நன்கொடை வழங்கியவர்கட்கும், உதவி புரிந்தோருக்கும் நன்றி தெரிவித்து, குழு கலைக்கப்பட்டது.

சென்னை — திருவள்ளுவர் முத்தமிழ் கழகம்

22—7—56 காலை 9-30 மணிக்கு மேற்படி கழகப் பணிமனையில், செயற்குழு தேர்வு நடைபெற்றது. தோழர் இரா து. சுப்பிரமணியத்தைச் செயலாளராகக் கொண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

தமிழர் நல்வாழ்க்கைக் கழகம்

22—7—56 காலை பேராசிரியர் மயிலை-சிவமுத்து அவர்கள் தலைமையில், சென்னை—தமிழர் நல்வாழ்க்கைக் கழகச் சார்பில், தமிழ்த் திருமணம் செய்துவைப்போர் அனைவரும், சென்னை— ஆயலூர் முத்தையா முதலி தெரு, எண் 34, இல்லத்தில் கூடினர். தோழர் பி. என். குருசாமி அனைவரையும் வரவேற்றார். தோழர்கள் வ. சுப்பையா, காஞ்சி-மணிமொழியார், சண்முகம், தணிகை உலகநாதன், வில்வபதி, முருகேசன், தோழியர் கலைச்செல்வி, பார்வதி அம்மையார் ஆகியோர் தமிழ்த் திருமணத்துக்கு மக்கள் அதிகமாக ஆதரவு காட்டவேண்டுமெனக் கேட்டுக்கொண்டு சொற்பொழிவாற்றினர். பின்னர் சில அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதுடன், உற்றார், உறவினர், நண்பர் முன்னிலையில் நடைபெறும் எல்லா திருமணங்களையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும், தமிழ் நாட்டிலுள்ள அறிஞர்கள் அனைவரும் தமிழ்த் திருமணம் சம்பந்தமாக அரிய கருத்துக்களைத் தந்துதவும்படி கேட்டுக்கொண்டும், தமிழர் விழாக்கள் என்னென்ன—அவைகளை எப்படிக் கொண்டாடுவது என்பதைக் கண்டறிய ஐவரடங்கிய குழு ஒன்று ஏற்படுத்தியும், இசைத் தட்டுகளில் திருமணத்துக்கு ஏற்ற முறையில் புதிய பாடல்களை அமைத்து நாடெங்கும் பரவச் செய்ய வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

டில்லி சர்க்கார் ஊழியர்கள்

ஆகஸ்டு முதல் சம்பள உயர்வு பெறுவர்

புதுடில்லி, ஜூலை 26—

"ரூ. 55-3-85 என்ற விகிதத்தில் சம்பளம் பெற்றுவந்த டில்லி சர்க்கார் இலாகாக்களின் குமாஸ்தாக்கள், வரும் ஆகஸ்டு முதல் ரூ. 60-3-85 என்ற உயர்ந்த விகிதப்படி சம்பளம் பெறுவர்," என்று, உள்நாட்டு மந்திரி பி. என் தத்தார், மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

மாகில சர்க்கார்களும் இது போல சம்பளம் தரவேண்டும் என்று டில்லி சர்க்கார் உத்தரவிடுமா ?"

என்று கேட்டபோது, 'இப்பிரச்சினையில் மாகில சர்க்கார்களுக்குக் கட்டளை பிறப்பிப்பதற்கு மத்திய சர்க்காருக்கு அதிகாரம் கிடையாது' என்று அமைச்சர் பதில் கூறினாராம்

நிசாமின் வாரிசு யார்?

மக்கள் சபையில் கேள்வி

புதுடில்லி, ஜூலை 6—

"ஐதராபாத் நிசாம், தனது சொந்த சொத்துக்களுக்கு வாரிசாக தனது மகனை பீரார் இளவரசனை விட்டுவிட்டு, தனது பேரனை நியமித்துவிட்டது உண்மைதானா?" என்று மக்கள் சபையில் கேட்கப்பட்டிருக்கிறது.

"இதுபோன்று பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது ; ஆனால், இதுபோன்ற வாரிசு நிர்ணயங்களை அரசியல் சட்டத்தின் 366 (22)-வது பிரிவுப்படி உரிய காலத்தில் குடியரசுத் தலைவர் செய்வார்," என்று உள்நாட்டு மந்திரி தத்தார் தெரிவித்திருக்கிறார்.

"நிசாம், தனது வாரிசாகப் பேரனை நியமித்தது குறித்து சர்க்காருக்குத் தெரிவித்தாரா?" என்று கேட்டபோது. மந்திரி 'அதிகாரப் பற்றற்ற குறிப்பு சர்க்காருக்குவந்தது; ஆனால், இதற்கு பதில் எல்லாம், உரியகாலத்தில் இவை கவனிக்கப்படும் என்பதுதான்,' என்று பதில் கூறியிருக்கிறார்.

அலுமினிய உற்பத்தித் தொற்சாலை நிறுவுதல்

இம்மாத இறுதிக்குள் மத்திய சர்க்கார் ஒரு முடிவுக்குவரும்?

சென்னை, ஜூலை 26—

இரண்டாவது திட்டத்தில் அலுமினிய உற்பத்தித் தொழிற்சாலையை நிறுவுவது சம்பந்தமாக இவ்வருட இறுதிக்குள் மத்திய சர்க்கார் ஒரு முடிவுக்குவரும் என்றும், அதற்குள் மிகச் சிறந்த தகுதியான இடங்கள் பற்றி இரண்டு அறிக்கைகள் கிடைத்து விடும் என்றும் கூறப்படுகிறது.

அமெரிக்க நிபுணர்கள் பாக்சைட் கிடைக்கும் இடங்களுக்குச் சென்று பார்வையிட்டபின் தயாரித்துவரும் அறிக்கை கிடைக்கும்.

மற்றொரு அறிக்கை, கடந்த ஆண்டு இறுதியில் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவினால் சமர்ப்பிக்கப்படும்.

பெயர்சூட்டு விழாவில் அண்ணா

22—7—56-ல் தோழர் அ. பொன்னம்பலனார் தலைமையில், திண்டிவனம் இராமவிலாஸ் உணவுவிடுதி உரிமையாளரும், தி. மு. க. உறுப்பினருமான தோழர் வே. நடராசன் அவர்களின் ஆண் மகவுக்கு நடைபெற்ற பெயர்சூட்டு விழாவில், அண்ணா அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்.

திரு-கொச்சியில் 123-இலஞ்ச வழக்குகள்

புதுடில்லி, ஜூலை 26—

"திரு-கொச்சி காட்டிலாகா அதிகாரிகளும், காண்ட்ராக்டர்களும் சிக்கிக்கொண்டிருக்கிற 123-வழக்குகள், இலஞ்ச ஒழிப்பு இலாகாவிடம் வந்துள்ளன," என்று, உள்நாட்டு மந்திரி தத்தார், மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

கைத்தயாரிப்பு தீக்குச்சி தொழில் நிலையங்கள்

ஏற்படுத்த நிதி உதவி

புதுடில்லி, ஜூலை 25—

குடிசைத் தொழில் முறையில், தீக்குச்சித் தயாரிப்பு நிலையங்களை ஏற்படுத்துவதற்கு அ. இ. கதர்—கிராமக் கைத்தொழில் போர்டு தெரிவித்திருந்த சிபாரிசை இந்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். எந்தெந்த இடங்களில் அவை திறக்கப்படும் என்பது இன்னும் தீர்மானமாகவில்லை. அந்த நிலையங்களில தீக்குச்சிகள், கைத்தயாரிப்பாகவே இருக்கும்.

ஒவ்வொரு நிலையத்துக்கும் ரூ. 9,000 வரை நிதி உதவி அளிக்கப்படும். இந்த அடிப்படையில் 1956—57-ல் 200 நிலையங்கள் ஏற்படுத்துவதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு நிலயத்திலும் தினம் 15 குரோஸ் தயாரிக்கப்படும். குச்சிக்கு மலிவான மூங்கிலும், பெட்டிக்கு பழைய காகிதமும் பயன்படுத்தப்படும்.

மத்திய ஆட்சி யோசனை கூறியிருக்கிறதாம்!

"பலமுனை விற்பனை வரிக்கு நியாயமில்லையென்றும், இதை ஒருமுனை வரியாக மாற்றும்படியும் மாகில சர்க்கார்களுக்கு மத்திய சர்க்கார் யோசனை கூறியிருக்கிறார்கள்' என்று மத்திய உணவு இலாகா மந்திரி மக்கள் சபையில் கூறியுள்ளார்.

இந்த ஆண்டும்!

சர்க்கார் 'மடிப்பிச்சை' எடுக்கும் !

சென்னை, ஜூலை 25—

சென்னை சர்க்கார் கடன் பத்திரங்கள் வெளியிடுவது சம்பந்தமான அறிக்கை ஆகஸ்டு இரண்டாவது வாரத்தில் எதிர்பார்க்கப்படுகிறது: ஆயினும் கடன் பத்திரங்கள் விற்பனை செப்டம்பரில் தான் ஆரம்பமாகும்.

எவ்வளவு கடன் வாங்குவது என்பது பற்றி இன்னும் ரிசர்வ் பாங்குடன் கடிதப் போக்குவரத்து நடந்து வருவதால் கடன் தொகை பற்றி இன்னும் முடிவாகவில்லை.

★

'இளங்கோவன்'

23—7—56 பிற்பகல் 2 மணிக்கு திண்டிவனம் இராம விலாஸ் உணவு விடுதி உரிமையாளர் தோழர் வெ. நடராசன் அவர்கள் ஆண் மகவுக்குப் பெயர் சூட்டு விழா, தோழர் அ. பொன்னம்பலனார் தலைமையில் நடைபெற்றது. உறவினர்களும், உள்ளூர் தி. மு. கழகத் தோழர்களும் விழாவில் கலந்துகொண்டார்கள். அண்ணா, அவர்கள் குழந்தைக்கு 'இளங்கோவன்' என்று பெயர் சூட்டினார்.

ஆருடக்காரர்களின் ஆபாசமான பித்தலாட்டங்களை விளக்கியும், பெயர் சூட்டு விழாக்கள் நாடெங்கும் நடைபெறவேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தியும் அண்ணா அவர்கள் சொற்பொழிவாற்றினார்.

மகவுக்கு தோழர் எஸ். நடராசன் அவர்கள் மோதிரம் ஒன்றும், தோழர் மு. மாரிசாமி அவர்கள் வெள்ளிப் பாலாடை ஒன்றும் பரிசளித்தனர்.

இப்பெயர் சூட்டுவிழா நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 11 அன்பளிப்பாகத் தரப்பட்டது—வரப்பெற்றோம் — நன்றி — பொறுப்பாளர்.

பெயர் [illegible]

15—[illegible] மணிக்கு, வெல்லோனி எஸ்டேட் தோழர் சின்னசாமி அவர்களின் ஆண்மகவுக்கும், பெண் மகவுக்கும், தோழர் எ. வெள்ளைச்சாமி தலைமையில், பெயர் சூட்டுவிழாவும், ஆண்டு விழாவும் நடைபெற்றது. தோழர்கள் மருதமுத்து, பிச்சையா, எம். கூத்தன், பாண்டித்துரை ஆகியோர் பேசினர். தோழர் முத்துசாமி, ஆண் மகவுக்கும் பெண்மகவுக்கும் முறையே 'சந்திரசேகரன்,' 'தமிழ்மணி' என்று பெயர் சூட்டினார். பல தோழர்கள் பரிசுகள் வழங்கினர். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை தரப்பட்டது—வரப்பெற்றோம் — நன்றி—பொறுப்பாளர்.

ஃ ஃ ஃ

கரூர் 15-வது வட்ட தி. மு. கழகத் தோழர் குப்புசாமி அவர்களின் ஆண் மகவுக்கு, தோழர் சங்கப்பிள்ளை முன்னிலையில், தோழர் குப்புசாமி அவர்களால் 'சம்பத்' எனப் பெயர் சூட்டப்பட்டது. இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்புத் தரப்பட்டது—வரப்பெற்றோம் — நன்றி—பொறுப்பாளர்.

இளைஞர்களைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்து, நல்ல குடிமக்களுக்கிருக்க வேண்டிய ஒழுக்க இலட்சியங்களை அவர்களுக்குப் புகட்டுவதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள தேசிய ஒழுங்குக் கட்டுப்பாட்டு திட்டத்திற்காக இந்திய சர்க்கார் 1955-56-ம் ஆண்டில் மொத்தம் ரூ. 4,82,000 செலவழித்துள்ளனர்.

‘எகிப்தை அடிமைகொள்ள விடமாட்டோம்’

‘சூயஸ்கால்வாய் எங்களின் தேசீய உடைமையாகும்’

‘அதன் வருமானம் அசுவான் அணை கட்டுவதற்குப் பயன்படும்’

எகிப்து பிரதமர் நாசர் முழக்கம்

அலெக்சாண்டிரியா ஜுலை 27— சூயஸ் கால்வாய் நிறுவனத்தை, அரசாங்கத்தின் உடைமையாக்கி விட எகிப்து முடிவு செய்து விட்டதாகக் குடியரசுத் தலைவர் நாசர் அறிவித்துள்ளார்.

‘சூயஸ் கால்வாய் நிறுவனத்திலிருந்து கிடைக்கும் வருமானம், அஸ்வான் அணைக்கட்டை உருவாக்குவதற்காகப் பயன்படுத்தப்படும்’ என்று அவர், மாபெரும் பொதுக்கூட்டமொன்றில் கூறியுள்ளார்.

180 மைல் நீளமுள்ள கால்வாயிலிருந்து ஆண்டுதோறும் கிடைக்கும் 10 கோடி டாலர் (ரூ. 47½ கோடி) வருமானத்தைக் கொண்டு நைல் நதி மீது அஸ்வான் அணையைக் கட்டுவதற்கு அந்நிறுவனத்தின் நிதி முழுவதும் முடக்கப்பட்டுள்ளது.

எகிப்துக்கும் — பிரிட்டனுக்குமிடையே அக்கால்வாய் குறித்து ஏற்பட்ட 99 ஆண்டு உடன்படிக்கை காலாவதியாவதற்கு இன்னும் 13 ஆண்டுகள் இருக்கின்றன; அதன் பின்னர், உடன்படிக்கையின்படி, கால்வாய் நிர்வாகம் எகிப்துக்குச் சேரவேண்டும்.

கால்வாய் நிறுவனத்தின் தலைமை அலுவலகம் பாரிசில் இருக்கிறது. இதில் வெளிநாட்டவர்களுக்கே பெரும்பான்மையான பங்குகள் இருக்கின்றன. தனிப்பட்ட நாடுகளில் பிரிட்டனே அதிகப் பங்குகள் வைத்திருக்கிறது.

சூயஸ் கால்வாய் கட்டப்பட்ட வரலாற்றை எடுத்துச் சொல்கையில், நாசர் சொன்னார்:—

“சுமார் 100 ஆண்டுகட்குமுன்பு, சூயஸ்கால்வாய் முற்றிலும் எகிப்தி[illegible] கட்டப்பட்டது. அதைக[illegible] 1,20,000 எகிப்தியர்கள் மரணமடைந்தனர். ஆயினும், இப்போது அக்கம்பெனிக்கு வரும் 350 இலட்சம் பவுன் வருமானத்தில், எகிப்துக்கு 10 இலட்சம் பவுன்தான் கிடைக்கிறது.”

மேற்கு நாடுகளின் ஏகாதிபத்தியக் கொள்கையைக் கண்டிக்கையில் நாசர் சொன்னார்:—

“அஸ்வான் அணைக்கட்டுக்கு நிதி உதவி அளிப்பதின் மூலம் தனது ஏகாதிபத்தியப் பொருளாதாரத்தை விரிவுபடுத்தவே மேற்கு நாடுகள் விரும்புகின்றன. எகிப்தை அடிபணிய வைக்கக்கூடிய அவைகளுடைய நிபந்தனைகளை நாங்கள் ஏற்க மறுத்தவுடனேயே அவைகள் தங்களுடைய உதவித் திட்டத்தைக் கைவிட்டுவிட்டன. மேற்கு நாடுகளின் நிபந்தனைப் பற்றிச் சுருக்கமாக எடுத்துச் சொல்வதானால், எகிப்தில் எனக்குப் பதிலாக உலக பாங்கியின் டைரக்டரை வைக்கப் பார்க்கிறார்கள் என்றே கூறவேண்டும்.”

‘உரிமைகளை இழக்கும் நிலைமை எழவில்லை’

இலங்கைப் பிரதமர் கூறுகிறார்

“சேது சமுத்திரத்தை ஆழப்படுத்துவதற்கு இந்தியா போட்டிருக்கும் திட்டம் தற்பொழுது கொழும்பு வழியாக நடைபெறும் கப்பல் போக்கு-வரத்தை கணிசமான அளவிற்குப் பாதிக்காது; இந்தத் திட்டத்தின் மூலமாக இலங்கை ஏதேனும் உரிமைகளை இழப்பதென்பதோ, அல்லது இந்தியா அதிகப்படியாக உரிமைகளை பெறுவதென்பதோ கிடையாது,” என்று, பிரதிநிதிகள் சபையில் இலங்கைப் பிரதமர் கூறியுள்ளார்.

பஞ்சாப்-நங்கல் மின்சார உற்பத்தியை பயன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படும் அமோகமானமின்சாரத்தைப் பயன்படுத்தும் வகையில் இரண்டாவது திட்டத்தில் பஞ்சாபின் தொழில்வளர்ச்சிக்குக் கண்டிப்பாக வாய்ப்பளிக்கப்பெறும் என்றும் பஞ்சாப் அரசாங்கச் சார்பில் கூறப்படுகிறது.

ஐம்பதாயிரம் கதிர்களைக் கொண்டு மூன்று கோடி ரூபாய் மூலதனத்தில் தனியார் துறையில் ஒரு நூற்பு ஆலையைத் துவங்கவும், மத்திய அரசாங்கத்தை பஞ்சாப் அனுமதி கோரி இருக்கிறது.

இருக்கும் தொழிற்சாலைகளை மேலும் விரிவடையச் செய்வதற்கும், தேவைப்படும் ஆராய்ச்சியையும் அந்த அரசாங்கம் தீவிரமாக மேற்கொண்டு இருக்கிறது.

சிறிய அளவு தொழில்களை நிர்மாணிப்பதற்கு மூன்று இடங்களில் பரீட்சார்த்தத் திட்டங்களையும் மேற்கொண்டு இருக்கிறது, பஞ்சாப் ஆட்சி!

தேஷ்முக் அறிக்கை தன்னைப் புண்படுத்துகிறதாம்

மாநில புது அமைப்பு விவகாரம் மந்திரி சபையில் விவாதிக்கப்பட்டதாம்

பிரதமர் நேரு கூற்று

புதுடில்லி, ஜுலை 27—

தேஷ்முக் தனது பதவி விலகலுக்கான காரணங்களை விளக்கி மக்கள் சபையில் தாக்கல் செய்த அறிக்கையின் சில பகுதிகள் தன்னை மிகவும் புண்படுத்திவிட்டதாகப் பிரதமர் நேரு, மக்கள் சபை காங்கிரஸ் உறுப்பினர் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

தாம் விரும்புகிறபடி நடந்து கொள்ளவும் தனக்கென ஒரு கருத்தை உருவாக்கிக்கொள்ளவும் தேஷ்முக் சுதந்திரம் படைத்தவர்தான்; ஆனால், முக்கியமான விவகாரங்களில் நான் மந்திரி சபையைக் கலந்து ஆலோசிப்பதில்லை என்ற அவரது குற்றச்சாட்டு முழுவதும் தவறானதாகும்,” என்றும் அவர் கூறியிருக்கிறாராம்.

“மாநில புது அமைப்பு பற்றிய எல்லா விவகாரங்களும் மந்திரி சபையினால் விவாதிக்கப்பட்டன; மேலும், இந்த விவகாரத்தில், சில நேரத்தில் மந்திரி சபையில் காரசாரமான விவாதங்களும் நடைபெற்றிருக்கின்றன; ஆனால், முடிவாக அறிவிக்கப்படும் கருத்துக்கள் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டவையாகும்” என்றும், பிரதமர் நேரு கூறினாராம்.

“இந்த நிலையில் தேஷ்முக் அறிக்கை, சில தகராறுக்குரிய அம்சங்களைக் கிளப்பிவிட்டிருப்பது வருந்தத்தக்குரியதாகும்” என்றும் அவர் கூறினாராம்.

****

தலைமைக் கழகம்: அறிக்கை—8/56

தி. மு. கழகக் கிளைகளின் தேர்தல்

கிளைக் கழகங்களுக்கு விளக்கம்

★

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்டு இயங்கிவரும் தி. மு. கழகக் கிளைகள் புதியதாக உறுப்பினர்களைச் சேர்த்திருப்பதை முன்னிட்டு, கிளைகளின் செயற்குழுவைப் புதுப்பிக்கும் வகையில் தேர்தல் நடத்த வேண்டிய அவசியமில்லை.

எந்தக் கிளையிலாகிலும், கிளையின் செயற்குழு உறுப்பினரோ அல்லது நிர்வாகப் பொறுப்பிலுள்ளவர்களோ விலகல் அல்லது விலக்கல் காரணமாகப் பொறுப்பை இழக்க நேரிட்டால், மாவட்டச் செயலாளரின் அனுமதிபெற்று, பொதுஉறுப்பினர் கூட்டத்தைக் கூட்டி மறுதேர்தல் நடத்தவேண்டும். இக்கூட்டங்களில் இப்போது உறுப்பினர்களாகப் பதிவுசெய்துகொண்டுள்ளவர்கள் அனைவரும் கலந்துகொள்ள உரிமை உடையவர்களாவர்.

மேற்குறிப்பிட்ட அவசியம் ஏற்படாத மற்ற எல்லாக் கிளைகளும் பொதுச்செயலாளரின் பொதுஅறிக்கை வெளியிடப்படும் போதுதான் கழகப் பொதுத்தேர்தலை நடத்தவேண்டும் என்பதை அறிய வேண்டுகிறோம்.

‘அறிவகம்,’ சென்னை—13, 28-7-1956

என். வி. நடராசன்
துணைப் பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

****

புதிய மாநிலங்களில் சிறுபான்மையினருக்கு வசதி

புதுடில்லி, ஜுலை 26—

புதிய மாநிலங்கள் அமைந்த பிறகு அந்த மாநிலங்களில் வாழும் 18 சத விகிதமும் அதற்கு மேலும் எண்ணிக்கையுள்ள சிறுபான்மை மொழியினர்களுக்கு சர்க்காரில் வேலை தருவது பற்றி, அந்த சிறுபான்மையினரின் மொழியையும் பொதுப் பணித் தேர்வுக் குழுவினர் பரீட்சை மொழியாகக் கொள்ள வேண்டுமென எல்லா மாநிலங்களுக்கும், டில்லி உள்நாட்டு இலாகா உத்தரவு பிறப்பிக்குமாம்.

இரா. நெடுஞ்செழியன் புதுவை வருகை

பஞ்சாலைத் தொழிலாளர் சங்க வரவேற்புப் பொதுக்கூட்டம்;

29—7—56 மாலை 6 மணிக்கு, புதுவை-ஒதியஞ்சாலைத் திடலில், வழக்கறிஞர் சு. பெருமாள் தலைமையில் நடைபெறும் வரவேற்புப் பொதுக் கூட்டத்தில், புதுவை பஞ்சாலைத் தொழிலாளர் சங்கச் சார்பில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு வரவேற்பு இதழ் வாசித்தளிக்கப்படும். வரவேற்புக்குப் பதிலளிக்கும் முறையில், பொதுச்செயலாளர் அவர்கள் அரியதோர் சொற்பொழிவாற்றுவார்.

★

திருக்கழுக்குன்றம் வருகை

2—8—56 வியாழனன்று, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் திருக்கழுக்குன்ற (செங்கற்பட்டு)த்திற்கு வருகை தருகின்றார்.

அன்று மாலை 5 மணியளவில், திரு. வி. க. மன்றத்தில் சொற்பொழிவாற்றுவார்.

கழகக் கூட்டம்

★

நாமக்கல்:

கே. வி. வி. ஆர். மேடையில் 30—7—56 மாலை 6 மணிக்கு

பேசுபவர்:
ஈ. வெ. கி. சம்பத்

★

அகரம் ஒகரந்தை:

30—7—56 மாலை 6 மணிக்கு

பேசுவோர்:
என். கிட்டப்பா
சி. ஐம்பு
கே. எஸ். சௌந்தரராசன்

கே. எஸ். பாண்டியன் பகுத்தறிவு படிப்பக 4-வது ஆண்டு விழா

29—7—56 மாலை 6 மணிக்கு, சென்னை வண்ணை கே. எஸ். பாண்டியன் பகுத்தறிவுப் படிப்பக 4-வது ஆண்டு விழாப் பொதுக்கூட்டம், மணிகண்ட முதலி தெரு, 3-வது சந்து (இராபின்சன் பார்க் எதிரில்) தோழர் கே. கோவிந்தசாமி தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, வி. முனுசாமி, எம். சி., மாணவி பி. எஸ். சற்குணம் ஆகியோர் பேசுவர்.

புதிய தொழில்கள் துவங்க

வாய்ப்பு — வசதிகள் இருக்கின்றனவா?

விவரங்கள் சேகரிப்பதற்கு சென்னை சர்க்கார் ஏற்பாடு

சென்னை, ஜுலை 28—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், சென்னை மாநிலத்தில், என்னென்ன புதிய தொழில்கள் துவக்கலாம்; அதற்கு என்னென்ன வாய்ப்புகள்—வசதிகள் இருக்கின்றன — என்ற விவரங்களைத் தயாரிப்பதற்குச் சென்னை சர்க்கார் தீர்மானித்திருக்கின்றனராம்.

இந்த விவரங்கள் சென்னை சர்க்காருக்கும்—தொழிலதிபர்களுக்கும் பயன்படுமென்றும், இப்பிரச்சினையில் சென்னை சர்க்காருக்கு உதவியாக மத்திய ஆட்சியுமிருக்குமென்றும் கூறப்பட்டுள்ளது.

வள்ளுவர் விழாப் பொதுக்கூட்டம்

29-7-56 மாலை 6-மணியளவில், சென்னை 21-வது வட்டம் அயன்புரம் மேட்டுத் தெருவில், வள்ளுவர் விழாப் பொதுக்கூட்டம் தோழர் எஸ். கே. பாலு தலைமையில் நடைபெறும். பேராசிரியர் க. அன்பழகன், தோழர்கள் பி. இ. பக்தவத்சலம்எம்.சி.- வி. எஸ். தேவசுந்தரம் ஆகியோர் பேசுவர்.

திருவள்ளுவர் திருநாள்

29—7—56 மாலை 6 மணிக்கு, கோவை, சிரியன் சர்ச் தெருவிற்கு அருகிலுள்ள இலட்சுமி அரிசி ஆலையில், புலவர் சா. மருதவாணனார் தலைமையில், திருவள்ளுவர் திருநாள் கொண்டாடப்படும். புலவர்கள் த. ஆறுமுகம், நா. சுந்தரராசனார், சி. இளங்கோவன் ஆகியோர் பேசுவர்.

திருக்குறள் வகுப்பு

29—7—56 காலை 10 மணிக்கு, சென்னை-வண்ணை, தமிழ் இளைஞர் கழகச் சார்பில், தனலட்சுமி உயர்தர ஆரம்பப் பள்ளியில், புலவர் ப. இராமநாதம் பிள்ளை அவர்கள், திருக்குறளில், ‘மக்கட் பேறு’ என்ற அதிகாரத்தை விளக்குவார்.

சொற்பயிற்சிக் கூட்டம்

29—7—56 காலை 10 மணிக்கு, சென்னை—வண்ணை, இளங்கோ கலை மன்றப் பணிமனையில், திரு. மு. செல்லப்பன் தலைமையில், சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும் தோழர்கள் க. கணேசன், கோ. கு சேகர், ப. மோகனவேல், வே. கோ. மோகன் ஆகியோர் பல தலைப்புகளில் பேசுவர்.

ஃ ஃ ஃ

29—7—56 காலை 9 மணியளவில், குயப்பேட்டை (24-வது வட்டம்) ராமாநுசத் தோட்டத் தெருவிலுள்ள திரு வி. க. மறுமலர்ச்சி மன்றப் பணிமனையில், தோழர் புகழேந்தி தலைமையில், ‘அஞ்ஞானமும், விஞ்ஞானமும்’ எனும் தலைப்பில் சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும்.

* * *

29—7—56 காலை 9 மணிக்கு சென்னை —முத்தியாலுப்பேட்டை முத்தமிழ் மன்றப் பணிமனையில், தோழர் என். ராமதாசன் தலைமையில், ‘விடுதலை’ எனும் பொருள் பற்றித் தோழர்கள் பலர் பேசுவர்.

சென்னை கல்விச் சங்கம்

29—7—56 மாலை 5 மணிக்கு, பட்டாளம், ஸ்ட்ரான்ஸ் ரோட், ஆண் பள்ளியில் ‘வாய்மை’ எனும் பொருள்பற்றி திரு த. வே. முருகேசனார் தலைமையில், திருவாளர்கள் வ. சுப்பிரமணியம், க வீ. வரதன் சொற்பொழிவாற்றுவர்.

திருவள்ளுவர் முன்னணிக் கழகம்

29—7—56 மாலை 7 மணியளவில், சென்னை—கொருக்குப்பேட்டை, என் 15, நாகப்பநாயகன் தெரு கழகப் பணிமனையில் தோழர் மு கிருட்டிணன் தலைமையில், ‘குறள் நெறி’ எனும் பொருள் பற்றி சொற்பயிற்சிக் கூட்டமும், இரவு 9 மணியளவில் கழகச் செயற் குழுக் கூட்டமும் நடைபெறும்.

சென்னை 29-வது வட்ட தி.மு.க. பொது உறுப்பினர் கூட்டம்

29—7—56 காலை 9 மணியளவில், மீரான் சாயபு தெரு, எண். 10 இல்லத்தில் (சஜம் அண்டு கோ), சென்னை 29-வது வட்ட தி. மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.